554

விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No

# உதயம்

வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவந்திபுரம் 3—11—46 விய ஆண்டு ஐப்பசி 18உ ஞாயிறு | இதழ் 14

## இன்றைய பிரச்சினை

[ஈ. மாணிக்கவாசகம்]

யுத்தம் நின்று சுமார் 20 மாதங் கட்கு மேலாகின்றன. அன்றிலிருந்து இன்று வரை சமாதான பேச்சுக்கள் நடந்த வண்ணமாகவே யிருக்கின்றன. இருந்த போதிலும், சமாதானமான வாழ்க்கை எங்கும் நிலவுவதாக எண்ணுவதற்கில்லை. ஒரு புறம் சமாதானப் பேச்சு நடக்கையிலே மறுபக்கம் மற்றொரு போராட்டத்திற்குத் தயார் செய்யப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இரகசிய இரகசியமாக ஆயுதங்கள் உற்பத்தி செய்து கொண்டும் படைகளைப் பெருக்கிக் கொண்டும் வரப்படுகிறது. சமாதானப் பேச்சுக்கள் நடக்கிற இடத்திலே நடக்கும் சொற்போர்களைப் பார்த்தாலே விளங்கும், இன்றைய சமாதானம் நிலைக்காது என்பது.

உண்மையான சமாதானம் நிலைக்க வேண்டுமானால், ஒருவரை ஒருவர் அடக்கி ஆளவேண்டும், ஒருவரை ஒருவர் சுரண்டி வாழ வேண்டும், என்ற எண்ணம் ஒழிய வேண்டும். இவை மனத்தை விட்டகலா முன் சமாதானத்தைக் குறித்து என்ன தான் கரடியாகக் கத்தினாலும் ஒன்றும் பயனளிக்காது என்று தைரியமாகக் கூறுவோம். மக்களிடையே பரஸ்பர நல்லெண்ணம் ஏற்பட வேண்டும்; அவர்களுக்குள் நம்பிக்கை தோன்ற வேண்டும்; பயம் ஒழிய வேண்டும்; இவர்களுக்குள்ளிருக்கும் துவேஷ உணர்ச்சி நீங்க வேண்டும்; இவைகளை வளர்க்கும் சாதனங்கள் அழிக்கப்பட வேண்டும். இவைகளை முதலில் செய்யாமல் வெறுப்பையும், பகையையும், அவநம்பிக்கையையும் வளர்க்கும் சாதனங்கள் ஒரு பக்கம் இருந்து வரவும், அம்மனப்பான்மை ஒரு புறம் வேலை செய்து வரவும் விட்டு விட்டு சமாதானத்தைக் குறித்துப் பேசுவதும் திட்டம் போடுவதும் என்றால், இக்காரியங்கள் உண்மையாகவே நல்லெண்ணத்துடன் செய்யப்படுகின்றனவா என்ற ஐயம் யாருக்கும் தோன்றாமலிருக்க முடியாது.

உலகத்தில் இன்று என்ன நிலையைக் காண்கிறோமோ அதே நிலையைத்தான் இந்தியாவிலும் காண்கிறோம் இந்தியாவில் சுயராஜ்யம் வந்து விட்டது; வெள்ளையன் வெளியேறுகிறான்; மூட்டை முடிச்சுக்களை கட்டிக்கொண்டிருக்கிறான் அடிமை இந்தியா சுதந்திர இந்தியாவாக திகழப் போகிறது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. ஆனால், உண்மையில் இங்கு காண்பது என்ன? என்றுமில்லாத அளவுக்கு, மக்களிடையே மனக்கசப்பும், கொதிப்பும் குழப்பமுமே காணக்கிடக்கிறது. இன்றுள்ள நிலைமை நீடிக்குமேயானால், இந்தியா அடிமையாயிருந்தாலும் பரவாயில்லையே, பாழாய்ப் போன இந்தச் சுதந்திரம் எதற்கு? சுயராஜ்யம் எதற்கு? என்று ஏங்கவேண்டி யிருக்கிறது. அவ்வளவு மோசமான நிலைமை நாட்டில் ஏற்பட்டு வருகிறது. மக்கள் ஒருவரை ஒருவர் வெறுப்பதும், பகைப்பதும் என்றுமில்லாத அளவுக்கு அதிகரித்து விட்டது.

உலகில், பல மதங்கள் உள்ள நாடுகள் வேறு இல்லையா? அங்கெல்லாம், இத்தகைய வெறுப்பும் பகையும் மக்களிடையே காணப்படுகின்றனவா? அவர்கள் இவ்வாறு ஒருவரை ஒருவர் அழித்து வருகிறார்களா? என்பதை எண்ணிப் பாருங்கள். அங்கெல்லாம் பற்பல மதங்களைப் பின்பற்றுகிறவர்கள் ஒருவரை ஒருவர் நேசித்து நல்லுறவுடன் வாழவில்லையா? இங்கு மட்டும் ஏன் இந்த நிலை? இந்த இடத்தில் தான் சிந்தனைக்குச் சற்று வேலை கொடுக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

ஐரோப்பாக் கண்டத்தில், மதம், ஒரு காலத்தில் இத்தகைய நிலையைத் தான் உண்டு பண்ணி வந்தது. அவநம்பிக்கையும், பகையும் அந்நாளில் வளர்ந்து தான் இருந்தது. ஆனால் மக்கள் பகுத்தறிவு பெற்று ஒருவரை ஒருவர் நன்குணர தொடங்கவே, இவை குறைந்து வரலாயிற்று. இப்பொழுது அடியுடன் மறைந்தும் விட்டது. ஆனால் இந்நாட்டில் மட்டும் அந்நிலை ஏற்படவேயில்லை. காரணம் மக்கள் அறிவு விளக்கம் பெறாததும் சகிப்புத்தன்மை கொள்ளாததுமேயாகும் ஏனெனில் இந்நாட்டிலுள்ள இந்து மதம் என்று சொல்லப்படும் ஆரிய மதம் மற்ற மதத்தை அழிப்பதிலே கவனம் செலுத்தி வந்திருக்கிறதே யல்லாது மற்ற மதங்களை அணைத்துக்கொண்டு போவதில் கவனம் செலுத்தவேயில்லை பிறமதங்களை அழிப்பதிலே ஓயாது உழைத்து வந்திருக்கிறது. என்பதை இந்நாட்டிலே தோன்றிய ஜைன மதத்தையும் புத்த மதத்தையும் நாட்டைவிட்டே துரத்தி விட்டதிலிருந்து தெரிந்துக் கொள்ளலாம். அம்மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு இழைத்திருக்கும் கொடுமைகளை எண்ணிப்பார்த்தால், எவ்வளவு துவேஷமும் குரோதமும் கொண்டதாக இவ்வாரிய இந்து மதம் விளங்கி வருகிறது என்பது விளங்கும். இம்மதத்தைப் பின்பற்றுபவர்களிடம் உண்மையிலே சகிப்புத் தன்மையோ பரஸ்பர நல்லெண்ணமோ காணமுடியுமா? பகுத்தறிவு பெற்ற ஒரு சிலரிடத்தில் காணப்பட்டாலும் பெரும்பாலானவர்களிடம் காணமுடியுமா? இந்நாட்டு மக்களில் பெரும்பாலோர் கல்வியறிவு இல்லாதவர்கள் இவர்கள் ஒரே குருட்டு நம்பிக்கையில் மதத்தை பின்பற்றுபவர்கள். இவர்களிடம், வெறுப்புணர்ச்சியும் பகைமைத் தீயும் காணமுடியுமே யல்லாது வேறு எதைக் காணமுடியும்?

அரசியல் விடுதலையிலீடுபட்டிருக்கிற கட்சிகளாவது இவ்வுணர்ச்சியை போக்க பாடுபட்டிருக்கின்றனவா என்றால் அதுவுமில்லை. காங்கரஸ் கட்சி தோன்றி 60 ஆண்டுகள் ஆகிறதென்று பெயரேயொழிய, நாட்டின் விடுதலைக்காக சுதந்திரத்திற்காகப் போராடுகிறதென்று ஜம்பமடித்துக் கொள்ளப்படுகிறதே யொழிய உண்மையில், மக்களின் மனப்பான்மையை மாற்ற ஒரு சிறிதும் பாடுபடவேயில்லை. இதற்கு மாறாக, இவர்களுக்குள் அதிருப்தியும், துவேஷமும் வளரக்கூடிய முறையில் காரியங்களைச் செய்து வந்திருக்கிறது. ஒரு மதத்தினர் மற்றொரு மதத்தினரை வெறுக்கும் காரியங்கள் நடப்பதை கண்டிக்காமல் அனுமதித்துக் கொண்டே வந்திருக்கிறது. இதன் விளைவு தான் இன்று நாட்டில் காங்கரஸ் இடைக்கால சர்க்காரை ஏற்றுக் கொண்டதும் வங்கத்திலும் பம்பாயிலும் நடைபெறும், குலை நடுங்கும் சம்பவங்களுமாகும். இத்தகைய சம்பவங்கள் காட்டுமிராண்டி காலத்தில், ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் சம்பந்தமில்லாத காலத்தில், மக்கள் அநாகரிகமாக வாழ்ந்து வந்த காலத்தில் நடந்திருந்தால் யாரும் கவலைப் படுவதற்கில்லை ஆனால் உலகம் நெருங்கியிருக்கிற நேரத்தில், உலக முழுவதும் ஒரு குடும்பம் போல் வாழ வேண்டுமென்று கருதப்படுகிற நேரத்தில், உலகின் ஒரு பகுதி தாக்குண்டால் உலகமனைத்தும் தாக்கப்பட்டதாகக் கருதப்படும் நேரத்தில் மக்கள் ஒருவரை ஒருவர் நெருங்கிப் பழக வேண்டிய அவசியமும் சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ள வேளையில், வெளிநாட்டின் படையெடுப்பிலிருந்து ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை பாதுகாக்கும் நிலையிலிருக்கிற தருணத்தில் இத்தகைய கலவரங்கள்

இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம்

## ★ வீரன் ★

(சென்ற வாரத்தொடர்ச்சி)

பை :— ஆ!...தாங்கள் கூறுவது உண்மையா?

இள :— அவ்வளவும் உண்மை. நாடு இந்த நிலையில் இருக்கும் போது, கேவலம் காதலா பெரிது? இதை நாம் மாற்ற வேண்டும். இல்லையேல் அழிவுக்கு இரையாவோம். பைங்கிளி! குமுதவல்லி! நீங்கள் என்னை விரும்புவது உண்மையானால் நாட்டுக்கோர் நற்பணி புரியுங்கள்.

பை :— செய்தால்?

குமுத :— தாங்கள் என்னுடையவர் ஆவீர்களா?

இளநா :— உங்கள் தந்தையாரின் போக்கை நன்மை தரும் வகையில் முதலில் மாற்றியமையுங்கள், அப்பணியில் வெற்றியடைந்தவருக்கு அதற்குத் தகுந்த பரிவு இல்லாமலா போய்விடும்?

குமுத :— இது உண்மைதானே?

பைங் :— வாக்குத் தவற மாட்டீர்களே?

இள :— என்றும் ஒரு வீரன் தான் கொடுத்த வாக்குத் தவறவே மாட்டான்.

6

[அரண்மனையில்]

பைங் :— அப்பா! உங்களுக்கு நான் புத்தி சொல்வதாக நினைக்கக்கூடாது. சம்பந்தாண்டாரிடம் தாங்கள் கொண்டுள்ள நெருங்கிய கட்பு நம் நன்மைக்கு உகந்ததாகத் தெரியவில்லை.

மாறவ :— வேடிக்கையாக இருக்கிறதே உன் பேச்சு! பைங்கிளி! சம்பந்தாண்டாரின் சம்பந்தமே நமக்கு சகல பாக்யமும் அளித்தது. (சிரித்து) பாவம் உனக்கெப்படித் தெரியும் அவரது பெருமை!......

பைங் :— இத்தனை நாள் தெரியாமல் தானிருந்தது. அப்பா! எவ்வளவு சமர்த்தராயினும் எல்லோரையும் எப்பொழுதுமே ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது.

மாற :— என்னம்மா சொல்லுகிறாய்! நம்மையார் ஏமாற்றுவது?

பைங் :— ராஜகுரு சம்பந்தாண்டார். அப்பா! நீங்கள் மன்னர், எனினும் நாட்டின் நிலை உங்களுக்குத் தெரியாது! நாட்டிலே தாண்டவமாடும் பசியையும் பஞ்சத்தையும் மகிழ்ச்சியும் இன்பமும் என்று கருதுகிறீர்கள். அடியோடு உங்கள் கடமையை மறக்கும்படிச் செய்து விட்டார், சம்பந்தாண்டார்!

மாற :— குழந்தாய்! ராஜ குருவின் மீது உனக்கேன் இவ்வளவு கோபம்?

பைங் :— அவர் இழைக்கும் அநீதியால் தான். சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் திறமை ஒடுக்கப்பட்டது, உபதேசத்தால்! ஆண்மை அழிக்கப்பட்டது, சேவிக்கைகளால்! நாட்டில் பெருகிவரும் அதிருப்தி மறைக்கப்பட்டது, உங்கள் கண்களுக்கு! இன்னும் என்ன? நாட்டு மக்கள் கொதித்தெழும் போது நம்மைக் காட்டிக் கொடுப்பது ஒன்றுதான் பாக்கி!

மாற :— (வியந்து) என்ன? புதுமையாக இருக்கிறதே! இதையெல்லாம் உனக்கு யார் சொன்னது?

பைங் :— மக்களின் வாழ்வில் அக்கரை கொண்டவர்.

மாற :— குழந்தாய்! பலவித ஐயப்பாடுகளை என் உள்ளத்தே குவித்துவிட்டாய். இவற்றை விரைவில் சோதித்தறிகிறேன்.

பைங் :— ஐயப்பாடுகளே இல்லை, இவைகள் கண்காணும் உண்மைகள் என்பதைத் தாங்கள் சீக்கிரமே அறிந்து கொள்ளுவீர்கள்!......

7

[சம்பந்தாண்டார் வீடு]

சம் :— (பாடுதல்)

"பாருருவாய பிறப்பற வேண்டும் பத்திமையும் பெறவேண்டும்
சீருருவாய சிவபெருமானே செங்கமல மலர்போல்
ஆருருவாய என்னாரமுதே உன்னடியவர் தொகை நடுவே
ஓருருவாய் நின் திருவருள்காட்டி என்னையும் உய்யக்
[கொண்டருளே."

குமுத :— அப்பா! இந்த பக்திக்கும் பூசைக்கும் உங்கள் மனப்பான்மை பண்பட்டிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

சம் :— குமுதம்! என்ன சொல்லுகிறாய்? இப்பொழுது மட்டும் என்ன குறைந்திருக்கிறது?

குமுத :— நீங்கள் வகிக்கும் 'ராஜகுரு' பதவிக்குப் பொருளே இல்லாமற் போய்விட்டதப்பா! படிப்புக்கும் செயலுக்கும் பொருத்தம் வேண்டுமென்று, நீங்கள் அடிக்கடி சொல்லுவீர்கள் ஆனால், நடந்து கொள்வதோ ...?

சம் :— என்னம்மா? இன்று என்ன நிலை தெரியாமல் பிதற்றுகிறாய்? என்ன செய்தி?

குமுத :— அப்பா! மன்னருக்கு அவரது கடமையை நீங்கள் உணர்த்தவில்லை. அரசை மறந்து ஆனந்த லாகிரியில் மூழ்கச் செய்தீர்கள். நாட்டின் நிலை கேவலமாய் விட்டது, அப்பா! மக்களின் கொதிப்புக்கு மன்னர் தான் பொறுப்பென்று நீங்கள் தப்பமுடியாது! தயவு செய்து மன்னவரை நேர் வழியில் செலுத்துங்கள். அது தங்கள் அரும் பணியாக இருக்கட்டும்.

சம் :— (சினந்து) சே! அதிகப் பிரசங்கி.........! எனக்கா யோசனை சொல்லுகிறாய்? மீன் குஞ்சுக்கு நீந்தப் பழக்குகிறாயோ?

குமுத :— அப்பா! நமது நன்மைக்காகவும் சொல்லுகிறேன். தயவு செய்து மன்னரைத் திருத்துங்கள். அரசரையும் உங்களையும் அறிஞர்கள் வெறுக்கிறார்கள்.

சம் :— ஆம்! இனியும் உன்னிடம் மறைப்பதில் பயனில்லை இதோ பார் குமுதம்! இதுவரை நான் செய்ததும் செய்து வருவதும், நம் நன்மைக்குத் தான். அரசியல் என் கைக்கு வரவேண்டும். அது என் லட்சியம்.

குமுத :— ஆ!......துராசை!

சம் :— அதற்காகவே மன்னனை நீ மணக்க வேண்டும். பெருத்த முயற்சிக்குப்பின் திருமணத்திற்கு இசைந்து விட்டான் மன்னவன். இந்த வேளையிலே, என்னென்னவோ பேசுகிறாய், பேதையே! காரியம் கெட்டுவிடும்.

குமுத :— அப்பா! நியாயம்தானா இது? அடுக்குமா உலகம்? தங்கள் சூழ்ச்சிக்கும், சுய நலத்திற்கும் நான் கருவியாக வேண்டுமா? இதற்குத்தான் என்னை வளர்த்தீர்களா?

சம் :— எதாக இருந்தால் என்ன? முடிவில் சுகப்படுவதாக இருந்தால்?...பட்டத்தரசியாவதென்றால் யார்க்கும் கிட்டிடுமோ?

குமுத :— சூழ்ச்சியால் சுகம் பெறுவதைக் காட்டிலும், நேர்மையில் துன்பப்படுவதே மேல்.

சம் :— நீ என்னதான் சொல்லுகிறாய்?

குமுத :— வாணிபத்தால் செல்வரானால், வையகம் ஏற்கும். வழிப்பறித்துச் செல்வரானால் தாங்குமோ உலகம்? நமக்கேன் இழிவு?

சம் :— எனக்கு உன் போதனை தேவையில்லை. என் தேவைக்கு நீ கீழ்படியவேண்டும். உயர்ந்த வாழ்வை உதாசினம் செய்யாதே!

குமுத :— இத்தகைய உயர்ந்த வாழ்வு எனக்கு வேண்டியதில்லை!......

# தாழ்த்தப்பட்டோரும் டாக்டர் அம்பேத்காரும்

40 கோடி மக்கள்கொண்ட இவ்வுப கண்டத்தில் 6 கோடிக்குமேல் தாழ்த்தப்பட்டோர் என்ற பெயரால் ஒரு பெரும் சமூகம் வாழ்ந்து வருகிறது. இச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் அரசியல், பொருளாதாரம், கல்வி, நாகரிகம், சுகாதாரம் முதலிய எல்லாத் துறைகளிலும் மிகப் பின்னணியிலிருந்து வருகின்றனர். இவர்களும் மற்றவர்களைப்போல் உழைக்கிறார்கள்—பாடுபடுகிறார்கள் இரவென்றும் பகலென்றும் பனியென்றும், மழையென்றும் பாராமல் உழைக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், மற்றவர்களைவிட அதிகமாக கஷ்டப்படுகிறார்கள். ஆனால், இவர்களுக்கு சுகமில்லை. வயிறார கஞ்சியில்லை; உடுத்த போதிய உடையில்லை; குந்த நல்ல குடிசையில்லை; குளிக்க இடமில்லை—நேரமில்லை; படிக்க வசதியில்லை. இந்த நிலையில் இருக்கிறார்கள் இச் சமூக மக்கள்.

உழைக்கிறார்கள் ஆனால் உண்ண உணவில்லை; பாடுபடுகிறார்கள் ஆனால் படுக்க பாயில்லை; நெய்கிறார்கள் ஆனால் உடுத்த ஆடையில்லை; ஏன் இந்த நிலை? இவர்களது உழைப்பு என்னவாயிற்று? உழைப்பின் பலன் எங்கே? சிந்தித்துப் பாருங்கள்.

நாட்டில், இன்று முன்னணியிலுள்ளவர்கள் எவ்வளவு தூரம் உழைக்கிறார்களோ அவ்வளவு தூரம் உழைக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் அதைவிட அதிகமாகவே உழைக்கிறார்கள். அப்படியிருந்தும் முன்னணியிலுள்ளவர்கள் (உயர் சாதிக்காரர்கள்) அனுபவிக்கும் உரிமைகளைவிட மிகக் குறைந்த அளவில்தான் அனுபவித்து வருகிறார்கள். இதிலிருந்து என்ன புரிந்து கொள்ள முடியும்? இவர்களது உழைப்பின் பலனை உயர்சாதிக்காரர்கள் தங்களுடைய உழைப்பினால் கிடைக்கும் பலனைவிட அதிகமாக அனுபவித்து வருகிறார்கள் என்பதுதானே பொருள்; அதாவது தாழ்த்தப்பட்ட மக்களின் உழைப்பை உறிஞ்சுகிறார்கள்—சுரண்டுகிறார்கள் என்பதாகும். இதற்கு இன்றுள்ள சமுதாய அமைப்பு முறை பழக்க வழக்கம், சாத்திரம் புராணம் முதலியவைகள் இடமளித்து வருகின்றன.

எனவே, தாழ்த்தப்பட்ட மக்களும் மற்றவர்களைப்போல் முன்னணியில் நிற்க வேண்டுமானால் அவர்களின் உழைப்பின் பலனை அவர்களே அடையத்தக்க முறையில் சமுதாய அமைப்பு திருத்தியமைக்கப்படவேண்டும்; கல்வி வசதி சுகாதார வசதி, குடியிருப்பு வசதி முதலியவைகள் தனியாக கிடைக்குமாறு செய்ய வேண்டும். இவை இவர்கள், உயர்சாதிக்காரர்களுடன்—முன்னணியிலுள்ளவர்களுடன் ஒன்றாக இருந்துவரும் வரை ஒரு நாளும் கிடைக்கப்போவதில்லை. ஆயிரக்கணக்கான வருடங்களாக இவர்களை—தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்கி வைத்து வந்தவர்கள் இவர்களது உழைப்பை உறிஞ்சி வந்தவர்கள் இப்பொழுது மட்டும் இவர்களை முன்னேறவிட்டு விடுவார்களா? அவ்வளவு தூரம் கருணை பிறந்து விடுமா? இது இயற்கையா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

உண்மையிலே, இவர்களும் மனிதர்களாக வாழவேண்டும்; மதிக்கத்தக்கவர்களாக இருக்கவேண்டுமென்றால், நாட்டில் சுரண்டுகிற கூட்டமும் சுரண்டப்படுகிற கூட்டமும் இல்லாமல் அழிந்தொழிய வேண்டும். இந்நிலைமை மாறுவதற்குமுன், இவர்கள் முன்னேற வேண்டுமானால், இவர்கள் தனி சமுதாயமாக இருந்து தனி உரிமை—தனி சலுகை பெற்றாக வேண்டும். கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் தனி வசதி பெற உரிமை வேண்டும். சர்க்கார் இவைகளை செய்துதர வேண்டும். இன்றைய சர்க்கார் சாதி இந்துக்களின் கையிலிருப்பதால், இவைகளைச் செய்யுமென்று எதிர்ப்பார்க்க முடியாது. பிரிட்டிஷ் சர்க்கார் எல்லா மக்களையும் ஒன்றுபோல் பாவிக்கிறோம், எல்லோருடைய முன்னேற்றத்திற்கும் உழைக்கிறோமென்று கூறுவது உண்மையானால், ஒரு கூட்டத்தார் மட்டும் முன்னேறவும் மற்றொரு கூட்டத்தார் பின்னேறிக்கொண்டே போகவுமான நிலைமை ஏற்பட்டிருக்கவே முடியாது. ஆகவே. அவர்களது சொல்லுக்கும் செயலுக்கும் சிறிதாவது சம்பந்தமிருப்பதாக எண்ணுவதற்கில்லை. மைனாரட்டிகளின் பாதுகாவலன் என்றும், மைனாரட்டிகளுக்கு பாதுகாப்பு அளிக்கிறோம் என்றும் பிரிட்டிஷ்சர்க்கார் இடைவிடாது சொல்லிவந்ததை அறிவதற்கு இப்பொழுது சந்தர்ப்பமிருக்கிறது. இவர்களுக்கு தனித்தொகுதி முறையிருந்தால் தான்—தனி உரிமையிருந்தால் தான் முன்னணியில் வரமுடியும். இதற்காகவே, டாக்டர் அம்பேத்கார் அவர்கள் லண்டன் சென்று பிரிட்டிஷ் சர்க்காருடன் பாதுகாப்பு அளிக்கிறீர்களா என்பதை விளக்குமாறு அறிக்கையொன்று கொடுத்துள்ளார். இது சம்பந்தமாக தோழர் N. சிவராஜ் அவர்களும் லண்டன் சென்று திரும்பினார்.

ஆனால், இதே சமயத்தில் தாழ்த்தப்பட்டோர்களை மீண்டும் அடிமைப் படுகுழியில் அறியாமையில், அநாகரிகத்தில் அழுத்தி வைக்கவும் அவர்களது உழைப்பைச் சுரண்டவும் முயற்சிகள் பல நடக்கின்றன. அவைகளில் ஒன்றுதான் ஆலயப் பிரவேசமென்பது. தாழ்த்தப்பட்டோர் ஆலயங்களுக்கு நுழைய அனுமதியளிக்கப்பட்டதால், அவர்களது நிலை என்னமாறும்? சுரண்டப்படுவதிலிருந்து காப்பாற்றப்படுவார்களா? அவர்களது பொருளாதார நிலை ஒரு அங்குலமாவது உயருமா? கல்விபெற இடமுண்டா? சுகாதாரம் பெறவசதியுண்டா? இவைகளுக்கெல்லாம் பொருளாதார விடுதலை ஏற்பட வேண்டாமா? இன்றுள்ள அமைப்பு முறையில் பொருளாதார சுதந்திரம் எப்படிருக்க முடியும்?

பொருளாதார சுதந்திரம் ஏற்பட வழி, உழைக்கிறவன் உழைப்பின் பலனை அனுபவிக்க வேண்டும் என்பதுதான். பிறர் உழைப்பை உறிஞ்சும் கூட்டம் ஒழிக்கப்படவேண்டும். அப்பொழுது தான் ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேறமடையமுடியும். இதற்கு கோவில் நுழைவு எவ்விதத்திலும் உதவாது. இதற்குமாறாக நாட்டிலே மொட்டைத் தலைகளின் எண்ணிக்கையைப் பெருக்கும்; கோவில்களின் வருவாயை உயர்த்தும்; அர்ச்சகர்களின் மடி கனமாகும்; தாழ்த்தப்பட்டோர் கடனாளியாவர் அல்லது வறியவராவர்; வருடாவருடம் கடன் பட்டாவது கோவிலுக்கு போய் மொட்டையடித்துக்கொண்டு வரவும் செலவு செய்து கொண்டு வரவும் தூண்டும். இவை தவிர பொருளாதார விடுதலையோ அறிவு விளக்கமோ சுகாதாரமோ தன்மான உணர்ச்சியோ பெறவே முடியாது!

எனவே, தாழ்த்தப்பட்டோர், இச்சமயத்தில் கோவில் நுழைவு என்ற போதையில் மயங்கிவிடாமல், உண்மையான சுதந்திரத்திற்கும் பொருளாதார தீண்டாமை, அரசியல் தீண்டாமை, கல்வியில் தீண்டாமை என்பவைகளை ஒழிக்கப் பாடுபடவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். இதற்கு தனி பாதுகாப்புத் தேடிக்கொண்டு தங்கள் சமுதாயத்தின் நலன்களை தாங்களே பாதுகாப்புத்தேடிக்கொள்வதாகும். இந்த நோக்கத்துடன் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் உழைத்து வருகிறார் அவரது உழைப்பு வெற்றி பெறுவது தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவையும்; ஒத்துழைப்பையும் பொறுத்திருக்கிறது.

★ ★ ★

இந்தியாவில் ஷெடியூல்டு வகுப்பார் நிலையை பிரிட்டிஷ் சர்க்காருக்கு எடுத்துரைக்கச் சென்றிருக்கும் **டாக்டர் அம்பேத்கார்** அவர்கள் 'க்ளோப்' அரசியல் பிரதிநிதிக்கு அளித்த பேட்டியில் "நாங்கள் ஷெடியூல்டு வகுப்பார் பாதாளத்தில் தள்ளப்பட்டு விட்டோம்; ஓநாய்களிடம் ஒப்புவிக்கப்பட்டு விட்டோம் என்று குறிப்பிட்டுள்ளார் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"தொழிற் கட்சி சர்க்கார், அதிகாரத்தை கன்சர்வேட்டிவ் கட்சியினரிடம் கொடுத்திருப்பது ஆச்சரியமாகவேயிருக்கிறது ஏனெனில், இன்று இந்த சர்க்கார் இந்தியாவில் செய்திருக்கும் காரியம் இது தான்.

இந்தியாவிலுள்ள காங்கரஸ் காரர்கள் அரசியல் போர்வை யணிந்துள்ள பக்கா ஹிந்துக்களேயாகும். அவர்கள் போடும் 'சுதந்திரம்' 'விடுதலை' என்ற கூச்சல் யாவும் ஹிந்துகொள்கைக்கே முரணானதாகும்.

அவர்கள் ஷெடியூல்டு வகுப்பாரை என்றும் அடிமையாக்கி அடக்கி வந்திருக்கிறார்கள். இரண்டாயிரம் வருடங்களாகவே ஷெடியூல்டு வகுப்பு மக்களை இந்நிலையில் வைத்து வருகிறார்கள்.

இந்தியாவுக்கு மந்திரி தூது கோஷ்டியினர் வந்திருந்தபோதே இதை விளக்கியுள்ளேன். நான் சொன்னதை எல்லாம் கேட்டு திருப்தியடைந்தது போல் காணப்பட்டார்கள். ஆனால் இறுதியில் எங்களை

(இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம்)

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முளைப விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்


# உதயம்

மலர் 1 3—11—46 இதழ் 14


## ஸ்தல ஸ்தாபன தேர்தல்

ஸ்தல ஸ்தாபனங்கள் என்பவைகள் யூனியன், முனிசிபாலிடி, ஜில்லா போர்டு ஆகியவைகளாகும். இந்த ஸ்தாபனங்கள் பொது மக்களின் சுகாதாரம், கல்வி, முதலியவைகளை நிர்வகித்து வருபவைகள். அதாவது அந்தந்த பகுதிகளில் நல்ல பாதைகள் அமைத்தல், சாக்கடைகள் கட்டுதல், விளக்குகள் போடுதல், கல்விச்சாலைகள் நிறுவுதல், ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தல், சிசுபரிபாலன விடுதிகள் ஏற்படுத்தல், குடிதண்ணீர் வசதி செய்தல் போன்ற காரியங்களை கவனிப்பது.

இவைகளை கவனிக்க அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்கள், இத்தகைய ஸ்தாபனங்களுக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து அனுப்புகிறார்கள். இவர்கள் இவைகள் யாவையும் நடத்திவரவேண்டும். இவையாவும் எல்லா மக்களுக்கும் பொதுவானவைகள்-தேவையானவைகள். இதில் எத்தகைய அரசியல் கொள்கைக்கும் சிறிதும் இடமில்லை. இதில் அரசியல் கொள்கையைப் புகுத்துவதென்பது மதக் கொள்கையைப் புகுத்துவதென்பது, எந்த நோக்கத்தின் மீது இந்த ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டனவோ அவைகளுக்கு நேர் முரணானதாகும்.

ஆனால் இன்று இந்நாட்டில், ஸ்தல ஸ்தாபனங்களில் அரசியல் கொள்கைகளைப் புகுத்தி தங்கள் தங்கள் அரசியல் கட்சியை வளர்க்கப் பிரச்சாரம் செய்ய பயன்படுத்தப் படுகிறதே யல்லாது உண்மையாக, மக்கள் என்ன நன்மையடைய வேண்டுமோ அவைகளை அடையப் பயன்படுத்தப்படவில்லை. அது மாத்திரமல்ல, இதுவரை, இந்நாட்டில், ஸ்தல ஸ்தாபனங்கள் பெரும்பாலும் சில சுயநலக் கூட்டத்தாரின் நலனுக்கு பயன்பட்டு வந்திருக்கிறதே யல்லாது பொது மக்களின் நலனுக்கு பயன்படவேயில்லை என்பதை தைரியமாகச் சொல்லுவோம். இவைகளில் இடம் பெறுகிறவர்கள், தங்கள் வீட்டுச் சொத்துபோல் இவைகளைக் கருதி தங்களுக்கும் தங்கள் குடும்பத்துக்கும், தங்களுக்கு வேண்டியவர்களுக்கும் என்னென்ன சௌகரியங்கள் செய்துகொள்ளலாமோ அவைகளைச் செய்து கொள்கிறார்களேயல்லாது பொதுவாக எல்லோரும் நலனடையக் கூடிய வகையில் எந்தக் காரியமும் செய்யப்படுவதேயில்லை. சொல்லலாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் பொது மக்களின் நன்மைக்கென்று, ஆனால் உண்மையில் பலனடைகிறவர்கள் ஒருசிலராகவே யிருப்பார்கள். இதற்கு உதாரணங்கள் தேவையில்லை. சிறிது சிந்தனை சக்தி யுடையவர்களுக்கும் விளங்கும். இதற்குக் காரணம் என்ன? பொது மக்களின் அலட்சியமும் அறியாமையுமேயாகும்.

ஸ்தல ஸ்தாபன மென்றால் என்ன? அது செய்யக்கூடிய காரியமென்ன? நாம் யாரைத் தெரிந்தெடுக்கிறோம்? அவர் நமக்கு என்ன செய்ய முடியும்? என்பவைகளைக்குறித்துயாரும் கவலைப்படுவதேயில்லை அறிந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறையுமில்லை. என்னமோ ஓட்டுபோடச் சொல்லுகிறார்கள், நமக்கு யாருடைய தயவு தேவையோ அவர்களுக்கு ஓட்டுப் போடுவது என்று பொது மக்கள் கருதுகிறார்கள். தேர்தலுக்கு நிற்பவர்களும், ஒன்று தங்கள் கட்சிப்பேரை சொல்லி ஓட்டு கேட்கிறார்கள் அல்லது தனிப்பட்ட முறையில் தங்கள் செல்வாக்கை யுபயோகப் படுத்தி தயவு தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டு ஓட்டுப் போடும்படிச் செய்கிறார்கள். உழைப்பைச் சுரண்டுவதுபோல் சுதந்திரத்தையும் சுரண்டுகிறார்களேயல்லாது நேர்மையாக எதுவும் நடப்பதாக என்னுவதற்கில்லை.

உண்மையாக, ஸ்தல ஸ்தாபனங்கள் பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால், பொது மக்களுக்கு ஸ்தல ஸ்தாபனமென்றால் என்ன? இவைகள் செய்யக்கூடிய காரியங்கள் என்ன? பொது மக்களின் உரிமை என்ன? என்பவற்றை விளக்கவேண்டும். பிறகு யார் எவ்வளவு அதிகப்படியான சௌகரியங்களை செய்து கொடுக்க முன் வருகிறார்களோ அவர்களை பொதுமக்கள் தெரிந்தெடுத்தனுப்ப வேண்டும்; தங்களின் தேவைகளை அவ்வப்போது வெளியிட்டு வரவேண்டும்; அவைகளை நிறைவேற்றி வைக்க முடியவில்லையென்றால், அவர்களுக்குப் பதில் வேறு பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க வேண்டும்.

இவைகளைச் செய்யாமல் இன்றுள்ள நிலையிலே இந்த ஸ்தாபனங்களுக்குத் தேர்தல் நடப்பதென்றால், அறிவுள்ளவர்களுக்கு என்ன வேலையிருக்கிறது! இவர்களால் என்ன செய்ய முடியும்? என்பது தான் நமக்கு விளங்கவில்லை.

உண்மையாகவே, எவராவது ஸ்தல ஸ்தாபனங்களின் மூலமாக ஏதாவது பொதுப்பணி செய்ய எண்ணினால், பொது மக்களுக்கு எடுத்து விளக்கட்டும் ஸ்தல ஸ்தாபனங்களின் நோக்கத்தையும், தாங்கள் அதில்போய் செய்யப்போகும் காரியத்தையும். இதைவிடுத்து கட்சிப் பிரதாபங்களையோ, தனது செல்வாக்கையோ குறித்துப் பேசி ஓட்டு கேட்பது ஒருநாளும் விவேகமாகாதென்பதோடு, பொது மக்களும் இத்தகைய பிரச்சாரத்திற்கு இடமளிக்கக்கூடாது என்பது தான் நமது ஆசையுமாகும். இதுவரை, கரண்டி வந்தது போதும் இனியாவது, பொதுமக்கள் விழிப்படையட்டும். வெறுங் கூச்சலையும் ஆர்பாட்டத்தையும் கண்டு ஏமாந்து போகாமல், தங்கள் உரிமையை மிகுந்த ஜாக்கிறதையாக பாதுகாத்து, ஒவ்வொருவரும் தனக்குச் சரியெனப் பட்ட பின், அவ்வுரிமையை உபயோகிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். மேற்கொண்டு சமயம் வரும்போது இதைக் குறித்து விளக்குவோம்.

## கெட்டிக்காரன் புளுகு?

'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு' என்று நாட்டிலே சொல்லுவார்கள். இது இந்நாட்டுக் காங்கரசுக்குத் தான் பொருத்தமாகயிருக்கிறது. காங்கரஸ் தலைவர்கள் இடைக்கால சர்க்காரில் நியமனம் செய்யப்பட்டதிலிருந்து, சுதந்திர சர்க்கார் நிறுவப்பட்டு விட்டது; சர்க்கார் நமதாகிவிட்டது என்று நம்பும்படி செய்து வந்தார்கள். தோழர் காந்தியார் முதல் எல்லா காங்கரஸ்காரர்களும் இதே கருத்

தை பரப்பி வந்தார்கள். காங்கரஸ் தாள்களும் இதே பிரச்சாரத்தை நடத்தி வந்தன.

காங்கரஸ்காரர்கள், இடைக்கால சர்க்காரில் நியமனம் செய்யப்பட்டதும், தோழர் காந்தியார் தமது பாராட்டுதலை தெரிவிக்கையில், காங்கரஸ்தலைவர்கள் முள்முடியை தரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் பெரும் பொறுப்பைத் தாங்கியிருக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டிருந்ததை யாவரும் அறிவர். இது எதைக் காட்டுகிறது? காங்கரஸ் தலைவர்கள் பதவி ஏற்றிருப்பது, இதுவரை இந்நாட்டு மக்கள் பெற்றிராத புதிய அதிகாரத்தைப் பெற்றுவிட்டதாக பாமரமக்கள் நம்பும்படி செய்ய வேண்டும் என்பதைத் தானே?

இன்று என்னவாயிற்று? இன்றைய இடைக்கால சர்க்கார் என்பது வைசிராயின் நிர்வாக சபையே யொழிய வேறொன்றுமில்லை; இதற்கும் இதற்கு முன்னிருந்த நிர்வாக சபைக்கும் அதிக வித்தியாசமில்லை! முன்னிருந்த நிர்வாக சபை எந்த சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அதாவது 1935ம் வருட சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதோ அதே சட்டத்தின் கீழ் வைசிராயின் அதிகாரத்திற்குட்பட்டு நிறுவப்பட்டதென்பது வெட்ட வெளிச்சமாய் விட்டதா அல்லவா?

இவ்விடைக்கால சர்க்காரின் நிதி மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டிருக்கும் தோழர் லியாக்கத் அலிகான் அவர்கள் தமது பேச்சில் இதை அடிக்கடி சுட்டிகாட்டுவதை கவனித்தால் விளங்கும். அதாவது இன்றுள்ள இடைக்கால சர்க்கார் வைசிராயின் நிர்வாக சபை என்று குறிப்பிட்டு வருவதை. இதுவரை, காங்கரஸ் தலைவர்கள் வாயிலிருந்து வைசிராய் நிர்வாக சபை என்ற சொல் வந்ததா? எவ்வளவு தூரம் கட்டுப்பாடாக மக்களை ஏமாற்றி வரப்பட்டிருக்கிறது என்பதை பொதுமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டு.

மேலும் பண்டித நேரு அவர்கள் இந்திய சட்டசபையில், ராஜவிசுவாசப் பிரமாணத்தை வாசிக்கையில், "நியமனம் செய்யப்பட்ட நான்" என்ற சொற்றொடரை வாசிக்கையில் சற்று முகம் 'சுளிக்க நேரிட்டதாகவும் சிறிது தயங்கினர் என்றும் செய்தி காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? இதுவரை, சர்க்காரை நடத்தும்படி தங்களிடம், பிரிட்டிஷ்காரர்கள் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லி வந்திருக்க இப்பொழுது நிர்வாக சபையில் மெம்பர்களாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறோம் என்று சொல்ல நேரிடுமானால் யாருடைய மனம் தான் தயங்காமலிருக்க முடியும்? என்ன செய்யலாம்? எவ்வளவு நாட்களுக்குத் தான் ஏமாற்ற முடியும்? எவ்வளவு கெட்டிக்காரத் தனமாக புளுகினாலும் எட்டு நாட்களுக்குத் தானே நிற்கும்? இனியாவது பொது மக்கள் வெறும் கூச்சல்களையும் ஆர்பாட்டங்களையும் நம்பி ஏமார்ந்து விடக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

இதுமட்டுமல்ல, இவ்வுபகண்டத்தில் ஜனநாயக முறைப்படி தனித் தனி கட்சிகள் ஆட்சி நடத்த முடியாது; பல இன மக்கள் வாழ்ந்து வருவதால், ஆட்சியில் அந்தந்த இனத்தின் பிரதிநிதிகள் போதுமான அளவு இருக்க வேண்டும்; அவர்களின் ஒத்துழைப்பின் மீது தான் எந்த சர்க்காரும் நடத்த முடியும், இதற்கு மக்களிடத்திலே பரஸ்பர நம்பிக்கையும் நல்லெண்ணமும் நல்லுறவும் ஏற்படவேண்டும் என்று நாம் அடிக்கடி எழுதி வந்தோம். இதையே தோழர் லியாக்கத் அலிகான் அவர்களும் டில்லியில் பத்திரிகைப் பிரதிநிதிகளுக்கு அளித்த பேட்டியிலும் வற்புறுத்தியுள்ளார் நாட்டிலே சமாதானமோ நல்லுறவோ ஏற்பட வேண்டுமானால், ஆட்சியில் எல்லா இனங்களின் பிரதிநிதிகள் இருக்கவேண்டும் என்பதை நன்கு விளக்கியுள்ளார். நாட்டின் நலத்திலே அக்கரையுள்ளவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

## எது செய்ய வேண்டும்?

நாட்டிலே எந்த ஒரு கொள்கையும், எந்தத் திட்டமும் வெற்றியடைய வேண்டுமானால் மக்கள் அறிவுடையவர்களாக யிருக்கவேண்டும். அவ்வாறு இல்லையானால், எவ்வளவு பெரிய கொள்கையானாலும் சரியே எவ்வளவு நல்ல திட்டமானாலும் சரியே அது நிலை பெற முடியாது. காளான்கள் மாதிரித் தோன்றித் தோன்றி மறையக்கூடியதாகவே யிருக்கும். இதனால் யாருக்கு என்ன பயன்?

இன்று இந்நாட்டிலுள்ள எந்தக் கட்சியும் எந்தப்பத்திரிகையும் இதை பற்றிக் கவலைகொள்வதாக இல்லை. மக்களை மேலும் மேலும் மூடத்தனத்தில் குருட்டு நம்பிக்கையில் அழுத்திவைக்கக் கூடிய முறையில் நடந்து கொள்கின்றன அல்லது மக்களுக்கு ஆத்திரத்தையும் வெறியையும் ஊட்டக் கூடிய முறையில் நடந்து கொள்கின்றன. நாட்டிலே உலாவும் பத்திரிகைகளும் நடைபெறும் பிரசங்கங்களும் இதே முறையில் நடைபெறுகின்றனவே யன்றி மக்களை அறிவு பெறச் செய்யக் கூடிய முறையிலோ வாழ்க்கை நிலையை உயர்த்தக் கூடிய முறையிலோ, வெளி உலக நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளக் கூடிய வகையிலோ, விஞ்ஞான அறிவு சரித்திர அறிவு பெறக்கூடிய முறையிலோ நடைபெறுவதில்லை. யாரும் கவலையுமெடுத்துக்கொள்வதில்லை. ஏன் இவ்வாறு சொல்லுகிறோமென்றால் நம்மை நாமே ஆளும் நாள் இது. இந்த வேளையில், ஒவ்வொருவரும் எவ்வளவு தூரம் அறிவுபெற்றிருக்க வேண்டும்? அறிவுபெற்றிருந்தால் தானே, நம்மை நாமே சரிவர ஆண்டுகொள்ள முடியும். இதற்கு நம்மைப் பற்றிய, அறிவு உலகத்தைப் பற்றிய அறிவு, பிறமக்களைப்பற்றிய அறிவு, பிற நாட்டைப் பற்றிய அறிவு இவை தெரிய வேண்டாமா? இவைகளைக் குறித்து மக்கள் உணராமல், பழய புராணங்களையும் கதைகளையும் திருப்பித் திருப்பிப் பாடிக் கொண்டிருப்பதாலோ அதைக் கண்டித்துக் கொண்டிருப்பதினாலோ என்ன பயன் விளையும்?

எனவே, மக்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கவும், இவர்களுக்குள் நல்லுறவு ஏற்படவும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு பத்திரிகையும் பாடுபடவேண்டுமானால், மற்றவர்களைப் பற்றி நன்கு தெரிந்துக் கொள்ள வேண்டும் இந்தத் துறையில் காஞ்சி திராவிட கழகத்தார் நம் நாட்டுக்கு நல்ல வழி காட்டியாகயிருந்து வருகிறார்கள் என்பதையறிய நாம் உளளபடி மகிழ்ச்சிக் கொள்கிறோம். சென்ற வருடம் திருச்சியில் நடைபெற்ற மாகாண திராவிடர் கழக மாநாட்டில், சமுதாய சீர் திருத்தத்தை விளக்கக் கூடியதும், அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரியக் கூடியதுமான சித்திரங்கள் தீட்டப் பட்டிருந்த படக் காட்சியை காஞ்சிபுர திராவிட கழகத்தார் செய்து வைத்திருந்ததை யாரும் மறந்திருக்க முடியாது. இப்பொழுது மேற்கொண்டும் அத்துறையைப் பெருக்குவதில் மேற்படி கழகத்தார் முயன்று வருகிறார்கள் எனத் தெரிகிறது. இம்முயற்சியில் அவர்கள் வெற்றியடைய வேண்டுமென்பது நமது அவா. இவர்களை பொது மக்கள் இருகைகளையும் நீட்டி வரவேற்பார்கள் என்றே நம்புகின்றோம். இதேபோல் நாட்டில் பலவிடங்களில் தோன்ற வேண்டும்; வெளி உலக அறிவு பரவ வேண்டும்; உலக அறிவு பெருகினால் தான் மக்கள் தனது பொறுப்பை யுணர்ந்து நடந்து கொள்ள முடியும். அப்பொழுதுதான் எந்தஇலட்சியமும் வெற்றியடைய முடியும் இதைப் பின்பற்ற வேண்டும், மற்றத் தோழர்களும் சங்கங்களும். இதுதான் இப்பொழுது செய்ய வேண்டிய முக்கிய கடமையும் பொறுப்புமாகும். விரைவில், காஞ்சி திராவிட கழகத்தார் நாடெங்கும் இத்தகைய காட்சியை நிறுவி வருவார்கள்,—நல்லுறவு தோன்ற பாடுபட்டு வருவார்கள் என்றே நம்புகின்றோம்.

# இளைஞனின் கடமை

(திலகேசன்)

இன்பத்தனலிடையே இளைஞன் தன் இறுதிப் போராட்டம் முடியும் என்று இறுமாந்திருந்தான். ஆனால், அவனது இறுமாப்பு இன்பத் தழலால் தாக்குண்டது. பின்னர் உணருகிறான் ஆம், நாம் தவறுனப் பாதையில் செலுத்தப்பட்டோம் என்று. காலம் வீணாகக் கடத்தப்பட்டதைக் கண்டு கலங்குகிறான். கண்களின் சோகம், அவனது உள்ளம் புதியதோர் இதயத்தடாகம், அத்தடாகத்தில் பூத்துக் குலுங்கிய மலர்கள் நறுமணத்தோடு வீசப்பட்டபோது நசுக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றன. இதை அவன் உணர்ந்தானில்லை. அவ்வாலிப முடுக்கிலே இடங்கொடுத்தான் அழியும் இன்ப உணர்ச்சிக்கு. பின்னர் அது அழிவுப் பாதைக்கு அடிகோலுவதை சிறிதும் அறிந்தானில்லை ஏவினான், ஏசினான், வைதான் அவன்தன் நலத்தைக் கருதிப் பாடுபட்ட மக்களை. தன்னுடைய இன்ப வெறியால் இவையாவும் நிலைத்திருக்கும் என்ற எண்ணங்கொண்டு, எண்ணி நகையாடினான் நற்புத்திப் புகட்டிய நண்பர்களையும், உறவினர்த்தாரையும். மறுமலர்ச்சிக் கொள்வதற்கு இதயம் இடமளித்தது. ஆனால் அதைப் பயன்படுத்திக் கொள்ள வகையறியாது வாடினான்- ஏன்; தான் சுழன்றுவந்த சுகபோகத்தால் தாக்குண்ட இளமனமலர் மீண்டும் மணம் பெறினும், தன் சுய உருவத்தையும் சுகந்த நாற்றத்தையும் தன்வசத்தே கொண்டிராது என்று. தனது சிறிது கால இச்சை தன்னைப்போன்றவர்களின் இன்ப வாழ்க்கையையும் அதற்குமேல் ஒருபடி அதிகமாக நாம் வாழவேண்டுமென்றும் வழி வகுக்கின்றானே தவிர, தன் நாட்டினரும் தன் இனத்தவரும் ஒருசில அதிகார வர்க்கத்தினரால் வதைக்கப்படுவதை உணர்ந்தானில்லை. பொலிவுடன் விளங்கிய நம்நாடும், மொழியும் இன்று சீர்குலைக்கப்படுவதைக் கண்டு சிந்தித்தானில்லை. சோர்வுற்ற அச்சிறு உள்ளம் பயனற்றதாய் போய்விடுகிறது. இரக்கமற்ற இன்பத்திடை தனது புத்தம்புதிய வாழ்நாளின் தொடக்கத்தை சிந்தனையின்றிச் செலுத்தினால் அறிவு மங்கி, வெறிபிடித்து அடிமையாகி, தனக்கும் தன் மக்களுக்கும் பயன்படாத பதருகின்றான். இத்தகைய இழிநிலைக்கா ஓர் இளைஞன் படைக்கப்பட்டான்? ஒவ்வொரு நாடும், அதன் மொழியும், அதன் மக்களும் அதன்தன் இளைஞர்களால் உய்விக்கப் பெற்றிருப்பதைக்கண்டும் கேட்டும் நாம் ஏன், நமது வாலிபப்பருவத்தை அப்பெரும் பணிக்கு அர்ப்பணம் செய்தல்கூடாது? உதயத்திலேயே, நாட்டின் நலங்கருதி நல்வழியில் திருத்தினால் அல்லாது சோர்வடைந்த பின்னர் மனந்திரும்பி சீர்திருத்தத்தை நாடுவது என்பது கடினமாகவேத்தான் தோன்றும். எம்மனோர் மதிப்பிற்குரிய தலைவர் ஈ. வே. ரா. அவர்கள் தனது 68-வது ஆண்டு நடக்கியும் பொதுச் சேவைக்கான பணியில் தன்நாட்டின் நலத்திற்கான சீர்திருத்த நோக்கத்தில் ஓர் வாலிப உள்ளத்தினராயிருக்கிறார் என்பது அவரது துணிவு உற்சாகமும் ஊக்கமும் பிரகாசிக்கின்றது. அவரது தொனியிலே, தாம் சிறியவராகயிருந்த போது வீசிய உணர்ச்சியலையை தன்னின்பம் கருதாது தன் நாட்டின் விடுதலைக்கான திசையை நோக்கி செலுத்தினர். உணர்வையும், ஊக்கத்தையும் தூடுப்புகளாகக்கொண்டு கடலிலே கலத்தைச் செலுத்தினர். இன்று அக்கப்பல் சுழற்சிகளுக்கிடையும், முழுநிலவின் ஆதிக்கத்தால் ஏற்படும் கொந்தளிப்புக்கிடையும் சாவகாசமாகச் செல்லுகிறது. பெரியாருக்குத் தெரியும் அப்பெரும் கொந்தளிப்புக்குக் காரணமான ;அம்முழு மதியிலும் கலங்கமிருக்கின்றது. அதையும் ஒரு நாளைக்கு பாம்பு வந்து வந்து விழுங்கிடும். அப்போது நமது கலம் அமைதியினூடேச் செலுத்தப்பட்டு, வெற்றியின் எல்லையைப் பிடித்துவிடலாம் என்று.

எனவே நாம், இளைஞர்களாகிய நாம், பெரியாரின் கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு, நமது வாழ்க்கையை இன்பமயமாய்க் கொண்டு இடருவதை விட நம்நாட்டின் பொலிவுக்கும் நம்மொழியின் வளர்ச்சிக்கும், நம்மக்களின் விடுதலைக்கும் நின்று போராடுவோம். அப்போராட்டத்தின் வெற்றிச் சின்னங்களே நமக்கு என்றென்றும் அழியா இன்பத்தைக் கொடுக்கும். அதுவே நாம் நம் நாட்டிற்கு மொழிக்கு, மக்களுக்கு செய்யவேண்டிய கடமை உணர்க. இளைஞர்காள்! வாழ்க பெரியார்!! வாழ்க திராவிடம்!!!

---

(3ம் பக்கம் தொடர்ச்சி)

கைவிட்டுவிட்டார்கள் தூது கோஷ்டியினர் நியாயமான உள்ளத்தோடு விசாரணையை நடத்த வில்லை.

நான் ஒரு யாதாஸ்து தயாரித்து வந்திருக்கிறேன். அதை பிரதம மந்திரி அட்லியினிடமும் இந்திய மந்திரியிடமும் கொடுத்துள்ளேன். இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது, ஆனால் உண்மை நிலையை யுணரட்டும் என்பதுதான் எனது அவா.

ஏதாவது செய்யலாம், தவறை திருத்திக்கொள்ளலாம் (மனமிருந்தால்). எங்கள் பிரதிநிதியை நியமனம் செய்யும் உரிமை யாவது எங்களுக்கு வேண்டும்.

தொழிற் கட்சி சர்க்கார் எங்களுக்கு பெரும் அநீதியைச் செய்து விட்டது.

பூனா உடன்படிக்கை கட்டாயத்தின் மீது செய்யப்பட்டது. அது ஒரு நாளும் ஒப்பந்தமாகாது.

இந்திய தேசத்தில், ஷெடியூல்டு வகுப்பு ஒரு பெரும் இனம் என்றும், முக்கியமான விஷயம் என்றும், தனிப்பட்டு கவனிக்கப்பட வேண்டிய காரியமென்றும் வைசிராய்களும், இந்திய மந்திரிகளும் மந்திரிசபையும் பற்பல சமயங்களில் அறிவித்து வந்திருக்கின்றனர்.

இப்பொழுது பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு வெளியேறுகிறார்கள். இந்த நேரத்தில் தாங்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டாமா?

ஆங்கிலேயருக்கு சரித்திரம் தெரியாது. இந்தியாவுக்கு ஆங்கிலேயர் வருவதற்கு துணைபுரிந்தவர்கள் தீண்டப்படாதவர்கள். இவர்கள் தான் கிழக்கு இந்திய கம்பெனியின் ராணுவத்தில் அந்நாளில் சேர்ந்தவர்கள். இதற்கு உதவி என்ன? உயர்ஜாதிக்காரர்களுக்கு நன்மை செய்த பிறகு ஏதோ சிறிது செய்யப்பட்டது.

பொருளாதாரத்துறையிலோ, சமுதாயத்துறையிலோ, கல்வித்துறையிலோ கடந்த 150 வருடங்களாக தீண்டப்படாத மக்களுக்கு ஒன்றும் செய்யப்படவேயில்லை

எனது பாட்டனார் பிரிட்டிஷாருக்காக சண்டை செய்து 19 பதக்கங்கள் பெற்றார். ஆனாலும் எனது தந்தை தீண்டாதவர் என்ற காரணத்தால் படிக்க அனுமதிக்க வில்லை. இது விஷயத்தை இந்திய சர்க்காருக்கு எடுத்துக்காட்டப்பட்டதற்கு, தீண்டாமை இந்திய சர்க்காரால் புகுத்தப்பட்டதல்ல; அதனால் ஒன்றும் செய்வதற்கில்லை என்று பதில் தெரிவித்து விட்டார்கள்.”


முந்துங்கள் ! முந்துங்கள் !!

**இன்றே ஆர்டர்களுக்கு முந்துங்கள் !!!**

எங்கும் புகழ்பெற்ற N. K. P. வேல் அவர்களால் டைரக்ஷன் செய்யப்பட்ட சாயத்தொழில் நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு மேல் நாட்டின் தயாரிப்பைக் காட்டிலும் உயர்ந்தவை என்ற உத்திர வாதத்துடன் அனுப்பப்படுவது?

சாயத் தொழிலுக்கு முதன்மை பெற்றது.

செல்வம் டர்க்கிரெட் ஆயில்கள் அண்டு நெப்தால் சோப்

ஒரே மணி நேரத்தில் நூல் நனைந்து நன்றாய் ஊறிவிடும். அப்பொழுதே சாயங்கள் தீர்க்கலாம். சாயம் தீர்க்கப்பெற்ற நூல் மிருதுவாகவும், பாலிஷாகவும் இருக்கும்.

இண்டாந்திரியன் முதல் நெப்தால் வரை உபயோகப்படுத்தலாம். எவ்விதபரீக்ஷைக்கும் உத்திரவாதமுள்ளது. விலை விபரங்களுக்கு எழுதவும்.

**ஏஜண்டுகள் தேவை !!!**

விலாசம் :—

செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர்,
திருச்செங்கோடு, P. O., சேலம் ஜில்லா,

உரிமையாளர்:— வேல்.

சம் :— குமுதம்! சித்தரித்த வாழ்க்கையைச் சிரழிக்கவா நினைக்கிறாய்? அப்படியானால் மன்னனை மணந்து கொள்ளமாட்டாயா?

குமுத :— மாட்டேன்.

சம் :— (சினந்து) நிச்சயமாகத்தானா?

குமுத :— ஆம் ... நிச்சயமாகத்தான்.

சம் :— (சினந்து) ஆஹா! என்ன துணிச்சல்! உன்னை வளர்த்து ஆளாக்கிய என்னிடமா எதிர்ப்பு?

குமுத :— ஆம். ஒருக்காலும் அநியாயத்திற்குத் துணை போக மாட்டேன்.

சம் :— இளநாகனுக்குத் துணை போகப் போகிறாயோ? பேயே? வளர்த்த பெண் ஒருத்தி எதிர்த்து நின்றால் புன்னகை புரிபவன் நானல்ல! எனக்குப் பயன்படாத நீ இந்த உலகத்திற்கே வேண்டாம் ஒழிந்து போ!

[கத்தியால் குத்தப் போக மன்னன் மாறவன்மன் பிரவேசிக்கிறான்]

மாற :— நிறுத்து நிறுத்து!

சம் :— (அஞ்சி) ஆ! மன்னவரா?

மாற :— கொலைக்குணம் படைத்தவரை குருவெனக் கொண்டாடிய கோமகன் தான்! (உறக்க) யாரங்கே? இந்தக் கயவனைக் கைது செய்யுங்கள், சிறைக்கூடத்திற்கு இழுத்துச் செல்லுங்கள்.

சம் :— மன்னவா!... மனித வாழ்க்கையில்......மாய காரியங்கள்......

மாற :— போதும் உபதேசம். நிறுத்தும்! உம்முடைய அரிய பெரிய பணியையும் அதன் பின் மறைந்து நிற்கும் உயர்ந்த நோக்கத்தையும், நான் இதுவரை நேரே கேட்டுக் கொண்டுதானிருந்தேன்.

8

[அரண்மனையில் இளநாகன்]

மாற :— இளநாகரே! உமது அரிய சேவைகள் ஒவ்வொன்றும் பாராட்டப்படவேண்டியவை. அறுவா நாட்டுப் போரில் படை நடத்தி வெற்றி கண்டதும், யானையிடமிருந்து பைங்கிளியைக் காத்ததும், என் கண்களை மூடியிருந்த மௌடீகத்திரையை விலக்கியதும் மகத்தான செயல்கள்!

இளநா :— மன்னர்பெரும அவை நாட்டுக்கும் அரசுக்கும் ஆற்ற வேண்டிய எனது கடமைகள்.

மாற :— உமது வீரச் செயல் மறக்க முடியாதவை! அவைகளுக்கேற்ற உயரிய பரிசு ஒன்றை உமக்களிக்காவிட்டால் எனக்கு மனச்சாந்தி ஏற்படாது...ஆம்! என் மகள் பைங்கிளியை காட்டிலும் உயர்ந்த பொருள் என்னிடம் ஏதுமில்லையே, அவளை உமக்கேற்ற பரிசாகவும்......

இளநா :— (மௌனம்)

மாற :— ஏன் மௌனம்?

இளநா :— அரசே! தாங்கள் அளிக்கும் அன்புப் பரிசை மறுப்பதற்கு மன்னிக்க வேண்டும்.

மாற :— (வியந்து) என்ன? என் மகளை ஏற்றுக்கொள்ளவா மறுப்பு? என் மகளையா?

இளநா :— ஆம். அரசே! நான் மறுப்பதற்காகத் தங்கள் மன்னிப்பை இறைஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாற :— ஏன்?

இளநா :— காதலுக்கு என் உள்ளத்தில் சிறிதும் இடமில்லை, நான் எப்படி ஒப்புவேன்?

மாற :— காதல் இல்லாத நெஞ்சமா? காவியத்திலும் கேட்டதில்லையே!

இளநா :— மன்னவரே! என் உள்ளத்திலே மட்டற்ற காதல் உண்டு, ஆனால் அது எந்தப் பெண்ணிடத்திலும் இல்லை...என் தாய் நாட்டின்மீது!

மாற :— நாட்டைக் காதலிப்பதா? பயன்?

இளநா :— பெண்ணைக் காதலிப்பதால் அடையும் பயனைவிடப் பெரிது.

மாற :— இயற்கைக்கு முரண்!

இளநா :— இருக்கலாம். ஆனால் மன்னவரே! நங்கையர் மேல் கொள்ளும் காதல், பழிகளையும் பாவங்களையும் ஈன்றெடுத்து, தன் பெண்டு, தன் பிள்ளை, தன் வீடு என்ற தன்னலச் சேற்றில் கொண்டு சேர்க்கிறது.

மாற :— நாட்டின் மேல் கொள்ளும் காதல்?......

இளநா :— மக்களின் முன்னேற்றத்திற்குரிய கலைகளையும் காவியங்களையும் ஈன்றெடுத்து, பொது நலம், பொதுத் தொண்டு, பொது வாழ்க்கை என்ற பூங்காவிலே கொண்டு சேர்க்கிறது. அரசே என் உள்ளத்தில் ஒவ்வொரு துடிப்பிலும் நாட்டு நலம்தான் எதிரொலிக்கிறது. இங்கு வேறு காதலுக்கோ, வாழ்வுக்கோ இடமில்லை.

மாற :— இளநாகரே! உம்மைக் காதலித்தவர் அடையும் கதி?

இளநா :— நான் என்ன செய்யக்கூடும்? கூண்டில் அடைபட மறுப்பது கிளியின் குற்றமாகுமா?

மாற :— பரிவுகாட்டும் வாக்குறுதி?

இளநா :— மாறவில்லை. இப்பொழுதும் அவர்கள் நன்று வாழ விரும்புகிறேன். ஆனால் காதலிப்பதும் கடிமணம் புரிவதும் பரிவு அன்று, பரிசுப் பொருளும் அன்று. அவைகளுக்கு என்னை அடிமையாக்கிக் கொள்ள மாட்டேன்.

மாற :— இளநாகரே! முடிவைச் சிறிது மாற்றிக் கொண்டால் நன்றாயிருக்குமே...

இளநா :— இல்லை. காதலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாலேயே கணக்கற்ற தவறுகள், பின்னால் நினைந்து வருந்தும் நிகழ்ச்சிகள் நேரிடுகின்றன. அரசர் பெரும! இந்நாட்டுக்கும் அரசுக்கும் நிரந்தர ஊழியம் புரிய விரும்பும், என் உறுதியைக் குலைக்க வேண்டாம்.

மாற :— உறுதி, மெச்சத்தகுந்ததுதான். ஆனால் அதன் வாழ்வைக் காலதேவன்தான் கணிக்கவேண்டும்!

இளநா :— (உடைவாளை உருவி) மன்னரே! பல உயிர்களைப் பலி கொண்ட இதோ இந்த வாளைக் கையிலேந்தி கூறுகின்றேன். நான் கொண்ட உறுதியினின்றும் வழுவிக் கோதையரின் காதலை வேண்டுவேனாகில், எனது நாட்டுக்கும் அரசுக்கும் துரோகம் செய்த குற்றம் என்னைச் சாரட்டும்!

மாற :... (அஞ்சி) இளநாகரே!

இளநா :— கொண்ட உறுதியினின்றும் தவறுவேனாகில், இதோ இந்த வாள்முனை பிளக்கட்டும் என் நெஞ்சத்தை! குடிக்கட்டும் குருதியை! மனமுவந்து ஏற்றுக்கொள்கிறேன்.

மாற :— (வியந்து) ஆ!...எவ்வளவு கடுமையான பிரதிக்ஞை! போரில் வீரன்!...கலையில் வீரன்...வாழ்க்கையிலுமா?

[திரை]

1-ம் பக்கம் தொடர்ச்சி

நடப்பதென்றால், இதைத் தடுக்க முடியவில்லை யென்று சொல்லப்படுமானால், இது உண்மையாகவே வியப்பைத் தருகிறதா அல்லவா என்று தான் கேட்கிறோம்.

இதற்கு என்ன சமாதானம் சொல்லப்பட்டாலும், மதத்தின் காரணமாக மக்கள் ஒருவரை ஒருவர் வெறுப்பதும், ஒருவரை ஒருவர் அழிக்க முற்படுவதென்றால் இது மிருகத்தனமான காரியமென்றே தைரியமாகச் சொல்லுவோம். இக்காரியத்தை எம்மதத்தைச் சேர்ந்தவர்கள் செய்தாலும் நாகரிகம் வாய்ந்த மக்கள் ஒருநாளும் ஆதரிக்கவே மாட்டார்கள். இத்தகைய காரியம் நடப்பதைக் கண்டித்தே தீருவார்கள். முதலில் இக்காரியம் நடப்பதை தடுக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு நாட்டை, எதிரிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றத் தயாராக யிருக்கும் சர்க்காருக்கு, நாட்டின் ஒரு பகுதியில்—ஒரு இடத்தில் நடக்கும் கலவரத்தை அடக்க முடியவில்லை யென்றால், இவ்வளவு நாட்களாக வளர விட்டுக் கொண்டிருப்பதென்றால், சர்க்காரின் நல்லெண்ணத்தில் யாருக்குத்தான் சந்தேகம் பிறக்காமல் இருக்கும்?

அரசியல் கட்சிகள் இனியும் வெறுப் புணர்ச்சியுடனே நடந்து கொள்ளுமேயானால், இவைகளுக்குள் பரஸ்பரநல்லுறவு ஏற்படவில்லை யானால், இத்தகைய காரியங்கள் தடுக்கப்படவே முடியாது. இப்பொழுது அரசியல் கட்சிகள் நடந்து கொள்கிற போக்கு யாருக்கும் கவலையைக் கொடுக்கக் கூடியதாகவே யிருந்து வருகிறது. அரசியல் தலைவர்கள் விடுக்கும் அறிக்கைகளும் பேசும் சொற்பொழிவுகளும் நிலைமையை மோசமாக்கக் கூடியதாகவே யிருக்கின்றன. அதிலும் இந்நாட்டிலுள்ள பத்திரிகைகளில் பெரும்பாலனவை செய்யும் பிரச்சாரம் சிறிதும் அறிவுடையதாகவே தோன்ற வில்லை. நாட்டிலுள்ள துவேஷத்தை தூண்டிவிடக் கூடியதாகவே யிருக்கிறது. இதற்குக் காரணம் உண்டு. இவைகள் எல்லாம் ஒருகுறிப்பிட்ட இனத்தார்களிடமே யிருந்து வருகின்றன. அதனால் இம்முயற்சியில் வெற்றி காண முடிகிறது; கட்டுப்பாடாக நடந்து கொள்ள முடிகிறது. ஆனால், இது நாட்டுக்கு நன்மை பயக்குமா? வாழ்க்கையை வளம்பெறச் செய்யுமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் பொது மக்கள் இன்றைய நிலைமை என்ன? இதற்கு காரணம் என்ன? என்பவற்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்நிலைமையைப் போக்க வழி கண்டு பிடிக்க வேண்டும். இதுதான் இன்றுள்ள முக்கிய பிரச்சினை யாகும் என்பதோடு சர்க்காரை ஒன்று கேட்கிறோம்.

அதாவது, கடந்த மூன்று நூற்றாண்டுகளாக நாட்டையாண்டு வந்ததின் விளைவு இதுதானா என்று? நாட்டை சுரண்டி வாண்ட வைத்தது மல்லாமல் ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு வெட்டிக் கொண்டு அழிந்து போகவுமான நிலைமையைசெய்துவிட்டு நான் போகிறேன் என்று சொல்லுவதா? இந்தியாவில் நடப்பது, இந்தியாவை மட்டும் பாதிக்காது, உலகத்தையே பாதிக்கும் என்பதை உலக மக்கள் கவனத்தில் வைக்க வேண்டும் இன்று இந்தியாவில் நடக்கும் கலவரத்தை உடனே அடக்க உலக மக்களும் முயல வேண்டும் என்று கடைசியாக கேட்டுக் கொள்கிறோம்.

---

## நன்றி

எனது சகோதரன் N. அர்ச்சுனன் 12—10—46ம் தேதி இறந்தது குறித்து சென்னை, காஞ்சிபுரம், சண்முகபுரம், திருவத்திபுரம், புவனகிரி, தூத்துக்குடி, பறங்கிமலை, நாகை, விருதுநகர், தென் மதுரை, மதுரை, அழகாடி, தஞ்சை, கும்பகோணம், பேராவூரணி, திருச்சி, திண்டுக்கல், பட்டுக்கோட்டை, நாகர் கோவில், தேவபாண்டலம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, ஆனைமலை, ராசிபுரம், செவ்வாய்ப்பேட்டை, சேலம், அம்மாபேட்டை, தர்மபுரி, கோயமுத்தூர், சூலூர், மணச்ச நல்லூர், முதலிய ஊர்களிலும், மற்றும் பல இடங்களிலும், அனுதாபக் கூட்டங்கள் கூடியும், இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றியும், எங்கள் குடும்பத்தார்க்கு அனுப்பி வைத்த, அனுதாபச் செய்திகளுக்கு, சுயமரியாதை சங்கங்களுக்கும், வாசகசாலைகளுக்கும், மற்றுமுள்ள திராவிட வாலிப, மாணவ, சழகங்களுக்கும், மற்றுள்ள திராவிட இயக்க அன்பர்களுக்கும், பந்துக்களுக்கும், நண்பர்களுக்கும், எங்களது மனமார்ந்த நன்றியை இப்பத்திரிகையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். தனிப்பட்ட முறையில் நன்றிகூறமுடியாததற்குவருந்துகின்றோம்.

N. நல்லசேனுபதி சர்க்கரை
மன்றுடியார்,
பழயகோட்டை பட்டக்காரர்.

---


சென்னை மாகாண நெசவுத்தொழில்

**பாதுகாப்பு மாநாடு**

சென்னை, செண்ட் மேரிஸ் ஹாலில்
**11—11—46ல் நடைபெறும்.**

தலைவர்:-முன்னாளமைச்சர் S. முத்தைய முதலியார்

வரவேற்பாளர்:-காஞ்சிபுரம் அ. க. தங்கவேலர், ஜனாப் அப்துல் மஜீத் M. L. A., திறப்பு விழா வாற்ற அழைக்கப் பட்டிருக்கிறார்.

நெசவுத்தொழிலில் சம்பந்தப்பட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொள்வார்கள்.



வெள்ளை, வெட்டை முதலிய உஷ்ண வியாதிகளுக்கு
**எங்கும் பிரசித்தி பெற்ற**

**இராஜாளி எண்ணெய்**

எந்த மருந்தினாலும் தீராத நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மஞ்சள், ரத்தசீழ் வெள்ளை, நீரடைப்பு, நீர் கடுப்பு, நீர் எரிச்சல், நீர் எரிவு, நீர்பிழிவு, ஆண்குறி நரம்புவலி, வீக்கம், சொறி, சிரங்கு, ஊரல், படை, கிரந்தி, புண், கைகால் பிடிப்பு, தந்திருலை, நாபிரணம், செற்பரணம், முதலிய மிக கொடிய மேக வியாதிகளை மறுமுறை வாராதபடி வேரற நீக்கக் கூடிய மருந்து. இதற்கு நிகர் வேறு இல்லை என்பதற்கு உறுதி கூறுகிறோம். குறைந்த விலை நிறைந்த குணம்.

பூர்ண குணந்தீற்ற உத்திரவாதமுள்ளது புட்டி 1-க்கு ரூ. 2—0—0

தயாரிப்பவர் :
சித்தவைத்திய பண்டிட் S. V. இராஜரத்தினக் கவுண்டர்,
R. I. M. (P)

சேர்மேன் தம்மண்ண செட்டி ரோட், அரிசிப்பாளையம், சேலம், S. I.


Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram. (N. A.)